## <u>விடுதிகளில் மாணவ, மாணவியரின் சேர்க்கைக்கு வருமானம் மற்றும் சாதி சான்றிதழ்களை சமர்பித்தல்</u>

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் சேர விரும்பும் மாணவ / மாணவியர்களின் பெற்றோர் / பாதுகாவலர் விடுதி சேர்க்கைக்கான விண்ணப்பத்தில் ஆண்டு வருமானம் மற்றும் சாதி குறித்து அளிக்கும் சுயஉறுதிமொழி அடிப்படையில் மாணவ, மாணவியர்களை முதலில் தேர்வு செய்யலாம் என்றும், தேர்வு செய்யப்பட்ட மாணவ, மாணவியர் விடுதியில் சேரும்போது பெற்றோரது ஆண்டு வருமானம் மற்றும் சாதி குறித்த சான்றிதழ்களை உரிய அலுவலர்களிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு பின்வரும் சலுகைகள் வழங்கப்படுகின்றன:–**

**<u>உணவுக்கட்டணம்</u>**

பள்ளி விடுதி ⏩ ரூ. 650/– ஒரு மாதத்திற்கு ஒரு மாணவருக்கு (20–09–2011 முதல்)

கல்லூரி விடுதி ⏩ ரூ. 750/– ஒரு மாதத்திற்கு ஒரு மாணவருக்கு (20–09–2011 முதல்)

**<u>செய்தித் தாள்கள்</u>** ⏩ பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளுக்கு ஓர் ஆங்கில நாளிதழ் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.

**மருத்துவப் பரிசோதனை** ⏩ ஆண்டுக்கு மூன்று முறை விடுதி மாணவ, மாணவியருக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்படுகின்றது.

**<u>முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள்</u>** ⏩ ஒவ்வொரு விடுதியிலும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்காக 5 இடங்கள் பிரத்யேகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**மாற்றுத் திறனாளிகள்** ⏩ ஒவ்வொரு விடுதியிலும் 3 சதவீத இடங்கள் மாற்றுத் திறனாளி மாணவ மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| 2. | **பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டம்**<br><br>**இத்திட்டத்தின் கீழ் 11 ஆம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரையிலான பல்வேறு படிப்புகளுக்கு இத்துறை கல்வி அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு கல்வி உதவித் தொகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:-** | | |
| | **பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை□ திட்டம்** | 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் | **<u>கற்பிப்புக் கட்டணம்</u>**<br>மாதம் ரூபாய் 50/– வீதம் 10 மாதங்களுக்கு ரூ.500/–<br><br>**<u>தேர்வுக் கட்டணம்</u>**<br>12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு முழுமையாக வழங்கப்படுகிறது.<br><br>**<u>பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியருக்கான நிபந்தனைகள்</u>**<br><br>1) பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br><br>2) குடும்பத்தில் வேறு பட்டதாரி எவரும் இருக்கக் கூடாது<br><br>மிகப்பிற்படுத்தப்பட்டோர் , சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு நிபந்தனை ஏதும் இல்லை. |
| | | **<u>அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு, பட்டயப் படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சி படிப்பு பயிலும்</u>**<br><br>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் , புத்தகக் கட்டணம் கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டவாறும் தேர்வு கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது.<br><br><u>நிபந்தனை</u><br>பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும் |

**கீழ்க்கண்டுள்ள இடங்களில் வக்ஃப் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளது**

| வ. எண் | தீர்பாயத்தின் பெயர் மற்றும் இடம் | அதிகார வரம்பு மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | மாநகர் உரிமையியல் நீதிமன்றம், சென்னை | சென்னை |
| 2. | முதன்மை சார்பு நீதிமன்றம், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 3. | சார்பு நீதிமன்றம், தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 4. | சார்பு நீதிமன்றம், வேலூர் | வேலூர் |
| 5. | சார்பு நீதிமன்றம், உதகமண்டலம் | நீலகிரி |
| 6. | சார்பு நீதிமன்றம், சிவகங்கை | சிவகங்கை |
| 7. | முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு | ஈரோடு |
| 8. | சார்பு நீதிமன்றம், புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 9. | சார்பு நீதின்றம், இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 10. | முதன்மை சார்பு நீதிமன்றம், கோயமுத்தூர் | கோயமுத்தூர் மற்றும் திருப்பூர் |
| 11. | சார்புநீதிமன்றம், கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 12. | சார்பு நீதிமன்றம், திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 13. | முதன்மை சார்பு நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர் | விருதுநகர் |
| 14. | முதன்மை சார்பு நீதிமன்றம், நாகர்கோவில் | கன்னியாகுமரி |
| 15. | முதன்மை சார்பு நீதிமன்றம், மதுரை | மதுரை மற்றும் தேனி |
| 16. | முதன்மை சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம் | நாகை மற்றும் திருவாரூர் |
| 17. | முதன்மை சார்பு நீதிமன்றம், சேலம் | சேலம் மற்றும் நாமக்கல் |
| 18. | சார்பு நீதிமன்றம், கடலூர் | கடலூர் |
| 19. | சார்பு நீதிமன்றம், தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 20. | முதன்மை சார்பு நீதிமன்றம், திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 21. | முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்சி | திருச்சி, கரூர் மற்றும் பெரம்பலூர் / அரியலூர் |
| 22. | சார்பு நீதிமன்றம், திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 23. | சார்பு நீதிமன்றம், விழுப்புரம் | விழுப்புரம் |
| 24. | சார்பு நீதிமன்றம், திருவள்ளூர் | திருவள்ளூர் |
| 25. | சார்பு நீதிமன்றம், தருமபுரி | தருமபுரி |

**7). இதர இனங்கள் – போக்குவரத்து இனங்கள்**

| | |
|---|---|
| 1). கார் / வேன் மற்றும் மினி வேன் | } அதிகபட்ச கடன் தொகை |
| 2).விவசாயத்திற்கான டிராக்டர் / டிரெய்லர் | } ரூ. 3.13 இலட்சங்கள் |
| | } வட்டி : 10% ஆண்டிற்கு |
| | } திரும்ப செலுத்தும் காலம் : 5 ஆண்டுகள் |

**8). புதிய கடன் திட்டங்கள்**

தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் அறிமுகப்படுத்தியுள்ள, கீழ்க்கண்ட புதிய கடன் திட்டங்கள், 2012–13 ஆம் ஆண்டில் டாப்செட்கோவால் செயல்படுத்தப்பட உள்ளன.

**அ) கல்விக் கடன்:–**

கீழ்க்கண்ட பங்கு வீதத்தின் படி ஒரு மாணவருக்கு, அதிகபட்சமாக, இந்தியாவில் தொழிற்கல்வி கற்க ரூ.10,00,000/–மும், வெளிநாட்டில் தொழிற் கல்வி கற்க ரூ.20,00,000/–மும் கடன் வழங்கப்படும்.

| | பங்கு வீதம் | வட்டி வீதம் |
|---|---|---|
| பயனாளியின் பங்கு | 5% | -- |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்கு | 5% | 4% |
| தேசிய கழகத்தின் பங்கு | 90% | 4% |

**(*) மாணவியருக்கு 3.5% வட்டி வீதத்தில் கடன் வழங்கப்படும்.**

திரும்ப செலுத்தும் காலம், தவணையுரிமை காலத்துடன், கல்வி முடித்து, ஆறு மாதத்திலிருந்து திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

**ஆ) தொழிற்கல்வி பட்டதாரிகளுக்கு, சுய தொழில் துவங்க கடன் திட்டம் (Saksham),**

இக்கடன் திட்டத்தின் கீழ், ஒரு பயனாளிக்கு, அதிகபட்சமாக ரூ.10,00,000/– வரை, பொது காலக் கடன் திட்ட விதிமுறைகளின்படி கடன் வழங்கப்படும்.

# தமிழ் நாடு மாநில ஹஜ் குழு

ஹஜ் குழுச் சட்டம், 2002–லுள்ள பிரிவுகளின்படி, தமிழ் நாட்டைச் சேர்ந்த ஹஜ் புனிதப் பயணிகளின் நலனைக் கவனிப்பதற்காகவும், ஹஜ் புனிதப் பயணத்தினை திறன்படவும் சிறப்பாகவும் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும், 'தமிழ் நாடு மாநில ஹஜ் குழு' என்ற அமைப்பு தமிழ் நாடு அரசால் அமைக்கப்பட்டது. மத்திய ஹஜ் குழு, மத்திய அரசின் வெளிவிவகாரத்துறை அமைச்சகம் மற்றும் தமிழக அரசு ஆகியோரால் வழங்கப்படும் முழுமையான வழிமுறைகளுக்குட்பட்டு ஹஜ் குழு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது:–

**1. விண்ணப்பங்கள் அனுப்பும் முறை:**

ஹஜ் காலம் தொடங்குவதற்கு முன்னர், வரவிருக்கின்ற ஹஜ் குறித்த பல்வேறு நேர்வுகளை விவாதித்து, மும்பை, மத்திய ஹஜ் குழு முடிவு செய்கிறது. மத்திய ஹஜ் குழு, மும்பையின் வழிகாட்டி நெறிமுறைகளின் அடிப்படையில், தமிழ் நாடு மாநில ஹஜ் குழு செய்திக் குறிப்பை வெளியிட்டு, ஒவ்வோராண்டும் ஹஜ்ஜிற்கான விண்ணப்பங்களைப் புனிதப் பயணிகளிடமிருந்து பெறுகிறது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதியை, மத்திய ஹஜ் குழு அறிவிக்கிறது. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் முஸ்லிம்களின் மக்கள் தொகைக்கேற்ப ஒவ்வொரு மாநில ஹஜ் குழுவிற்கான ஒதுக்கீட்டை மைய அரசு நிர்ணயிக்கிறது. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் தமிழ் நாட்டிற்கு அளிக்கப்பட்ட ஒதுக்கீட்டைவிட அதிகமாக தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவால் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. ஒதுக்கீட்டை அதிகப்படுத்தி வழங்குவது தொடர்பாக வெளிவிவகாரத்துறை அமைச்சகத்திடம் தமிழக அரசு எடுத்துரைக்கிறது.

**(அ) சிறப்பு வகை.**

1) 29.2.2012 அன்று 70 வயது பூர்த்தியான விண்ணப்பதாரர்களாக இருந்தால், ஒரு பயணியுடன் துணைப் பயணி ஒருவரை ஹஜ் 2012–ற்காக குலுக்கலின்றி தெரிவு செய்ய இந்திய ஹஜ் குழு முடிவெடுத்துள்ளது.

2) ஹஜ் 2009 முதல் 2011–ல் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளாக தெரிவு செய்யப்படாமல், ஹஜ் 2012–ற்கு விண்ணப்பித்த பயணிகளின் விண்ணப்பங்களையும் தெரிவு செய்ய இந்திய ஹஜ் குழு முடிவெடுத்துள்ளது.

## சிறுபான்மையினர் நலத்துறை

சமுதாயத்தில் கல்வி மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின மக்களின் நலனை பேணிக் காப்பதிலும் பாரத பிரதமரின் புதிய 15 அம்ச திட்டத்தினை செயல்படுத்தும் வகையிலும் சிறுபான்மையினர் நல இயக்ககம் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டங்களை மாவட்டங்களில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மூலம் செயல்படுத்தப்பட்டும், சிறுபான்மையினர் நல ஆணையரகத்தில் கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

## 2. இடஒதுக்கீடு

தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர் இனத்தவருக்கென்று ஏற்கனவே உள்ள 30 சதவீத இட ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவீதம் உள்–இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு / அரசு சார்ந்த நிறுவனங்களின் வேலைவாய்ப்பு நியமனங்களில் திருத்திய இனச்சுழற்சி உள்–இடஒதுக்கீடுமுறை செயல்படுத்தப்பட்டு வருகிறது

## 3. கல்வி உதவித்தொகைகள்

கிருத்துவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்தமதத்தினர் மற்றும் பார்சி போன்ற மதவாரி சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவ / மாணவியருக்கு பின்வரும் கல்வி உதவித் தொகை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசு / அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயில்பவர்கள் கல்வி உதவித்தொகை வேண்டி விண்ணப்பிக்கலாம்.

## 3.5 மாணவ, மாணவியர் விண்ணப்பிப்பது எப்படி?

- தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியர்கள் புதியது / புதுப்பித்தல் கல்வி உதவித் தொகை விண்ணப்பங்களை ஆன்லைன் (Online) மூலம் www.momascholarship.gov.in என்ற இணையதள முகவரியில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

- பதிவு செய்த கல்வி உதவித் தொகை படிவத்தை படியிறக்கம் செய்து அத்துடன் மதிப்பெண் சான்றிதழ்கள், சாதி / வருமானம் சான்றிதழ் (அ) ரூ.10/– நீதிமன்ற சாரா முத்திரைத்தாளில் பெற்றோர் / பாதுகாவலர் சுய உறுதி மொழி படிவம், நிரந்தர (ம) தற்போதைய முகவரிக்கான விவரம், கல்விக் கட்டணம் செலுத்திய ரசீது ஆகியவற்றை கல்வி நிலையங்களிலேயே உரிய காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

## 3.6 கல்வி நிலையத்தின் நடவடிக்கை

- கல்வி நிலையத்தின் முதல்வர்கள், மாணவ / மாணவியர் ஆன்லைன் மூலம் பதிவு செய்து, அனைத்து இணைப்புகளுடன் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை தணிக்கைக்காக கல்வி நிலையத்தின் பாதுகாப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

- ஆன்லைன் மூலம் பதிவு செய்யப்பட்ட புதியது / புதுப்பித்தல் விண்ணப்பங்களை www.momascholarship.gov.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் மூலம் சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு உரிய ஆய்விற்கு பின்னர் அனுப்ப வேண்டும். மற்றும் பதிவு செய்யப்பட்ட மாணவ, மாணவியருக்கும் அனுப்ப வேண்டும். புதிய கல்வி உதவித் தொகைக்கு மதிப்பெண் பட்டியலின் நகலையும் இத்துறைக்கு நேரடியாக குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பரிசீலனைக்காக அனுப்பி வைக்க வேண்டும்.

# 4. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை (Postmatric Scholarship)

+1, +2, வாழ்க்கை தொழிற்கல்வியில் (Vocational Courses) +1, +2, ஐடிஐ / ஐடிசி, தேசிய தொழிற்நெறிப்பயிற்சி குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிகள் (NCVT), இளங்கலை பட்டப்படிப்பு, முதுகலை பட்டப்படிப்பு, ஆராய்ச்சி படிப்பு, பாலிடெக்னிக், நர்சிங் மற்றும் ஆசிரியர் பட்டயப்பயிற்சி (தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பாடப்பிரிவுகள் தவிர) பயில்பவராக இருத்தல் வேண்டும்.

## 4.4 கல்வி உதவித் தொகை விண்ணப்பிப்பது எப்படி? மேல் நிலைப்பள்ளி பயிலும் மாணவர்களுக்கு

- எளிமையாக்கப்பட்ட புதியது / புதுப்பித்தல் விண்ணப்பப்படிவங்களை www.tn.gov.in/bcmbcmw/welfschemes_minorities.htm என்ற இணையதள முகவரியில் படியிறக்கம் செய்து, அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து மதிப்பெண் சான்றிதழ், சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் (அ) ரூ.10/– நீதிமன்ற சாரா முத்திரைத்தாளில் பெற்றோர் / பாதுகாவலர் சுய உறுதி மொழில் படிவம், நிரந்தர (ம) தற்போதைய முகவரிக்கான விவரம், கல்விக் கட்டணம் செலுத்திய ரசீது ஆகியவற்றை கல்வி நிலையங்களிலேயே இத்துறையால் வெளியிடப்படும் விளம்பரங்களில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

### மேல் நிலை பள்ளி பயிலும் மாணவர்கள் நீங்கலாக பிற மாணவர்களுக்கு

- மாணவ / மாணவியர் புதியது / புதுப்பித்தல் கல்வி உதவித் தொகை விண்ணப்பங்களை ஆன்லைன் (Online) மூலம் www.momascholarship.gov.in என்ற இணையதள முகவரியில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

- பதிவு செய்த கல்வி உதவித் தொகை படிவத்தை படியிறக்கம் செய்து அத்துடன் மதிப்பெண் சான்றிதழ்கள், சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் (அ) ரூ.10/– நீதிமன்ற சாரா முத்திரைத்தாளில் பெற்றோர் / பாதுகாவலர் சுய உறுதி மொழிப் படிவம், நிரந்தர (ம) தற்போதைய முகவரிக்கான விவரம், கல்விக் கட்டணம் செலுத்திய ரசீது ஆகியவற்றை கல்வி நிலையங்களிலேயே உரிய காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

## 4.5 கல்வி நிலையத்தின் நடவடிக்கை

- கல்வி நிலையத்தின் தலைமையாசிரியர் / முதல்வர்கள், மாணவ, மாணவிகள் ஆன்லைன் மூலம் பதிவு செய்து, அனைத்து இணைப்புகளுடன் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை தணிக்கைக்காக கல்வி நிலையத்தின் பாதுகாப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

- மேல் நிலைபள்ளி முதல்வர்கள் / தலைமையாசிரியர்கள் +1, +2 பயிலும் மாணவ / மாணவியர் பூர்த்தி செய்து இணைப்புகளுடன் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை கல்வி நிலையத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை நெறிமுறைகளின்படி கூர்ந்தாய்வு செய்து, பின்னர் புதியது / புதுப்பித்தல் என வகைப்படுத்தி தனியே கேட்புப்பட்டியலில் வகுப்பு வாரியாக தயார் செய்தல் வேண்டும்.

- இவ்விவரங்களை Ariel Font , Size – 12–ல் குறுந்தகட்டில் (CD) பதிந்து தங்கள் கல்வி நிலையத்திற்குட்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திற்கு உரிய காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

# 5. பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை (Pre-matric Scholarship)

ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு பயில்பவராக இருத்தல் வேண்டும்.

## 5.1 தமிழ்நாட்டிற்கு மைய அரசால் கல்வி உதவித் தொகை (புதியது) ஒதுக்கீடு எண்ணிக்கை விவரம் (2012–13)

| கிருத்துவர் | இஸ்லாமியர் | சீக்கியர் | புத்தமதத்தினர் | பாரசீகர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 149625 | 137250 | 375 | 375 | 34 | 287659 |

## 5.2 தகுதிகள்

| | |
|---|---|
| **மதிப்பெண்** | முந்தைய ஆண்டு இறுதி தேர்வில் (ஒன்றாம் வகுப்பு நீங்கலாக) 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். |
| **வருமானம்** | பெற்றோர் (அ) பாதுகாவலர் ஆண்டு வருமானம் (அனைத்து வழிகளிலும்) ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |

## 5.3 கல்விக் கட்டணம்

| வகுப்பு | * சேர்க்கை கட்டணம் ரூ. | * கற்பிப்புக் கட்டணம் ரூ. | பராமரிப்பு படி (கல்வியாண்டில் 10 மாதங்களுக்கு மட்டும்) | |
|---|---|---|---|---|
| | | | விடுதியில் தங்கி பயில்பவர்கள் ரூ. | விடுதி வசதியின்றி பயில்பவர்கள் ரூ. |
| I – V | **–** | **–** | **–** | **1000** |
| VI – X | **500** | **3500** | **6000** | **1000** |

**குறிப்பு :** மாணவ / மாணவியர் செலுத்திய தொகை (அ) மேலே குறிப்பிடப்பட்ட தொகை, இதில் குறைவானது வழங்கப்படும்.

## 5.4 பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை விண்ணப்பிப்பது எப்படி?

- எளிமையாக்கப்பட்ட புதியது / புதுப்பித்தல் விண்ணப்பப்படிவங்களை www.tn.gov.in/bcmbcmw/welfschemes_minorities.htm என்ற இணையதள முகவரியில் படியிறக்கம் செய்து, அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து, மதிப்பெண், சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் (அ) ரூ.10/– நீதிமன்ற சாரா முத்திரைத்தாளில் பெற்றோர் / பாதுகாவலர் சுய உறுதிமொழிப் படிவம், நிரந்தர (ம) தற்போதைய முகவரிக்கான விவரம், கல்விக் கட்டணம் செலுத்திய ரசீது ஆகியவற்றை

கல்வி நிலையங்களிலேயே இத்துறையால் வெளியிடப்படும் விளம்பரங்களில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

## 5.5 <u>கல்வி நிலையத்தின் நடவடிக்கை</u>

- பள்ளி முதல்வர்கள் / தலைமையாசிரியர்கள், மாணவ / மாணவியர் பூர்த்தி செய்து இணைப்புகளுடன் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை கல்வி நிலையத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை நெறிமுறைகளின்படி கூர்ந்தாய்வு செய்து, பின்னர் புதியது / புதுப்பித்தல் என வகைப்படுத்தி தனியே கேட்புப்பட்டியலில் வகுப்பு வாரியாக தயார் செய்தல் வேண்டும்.

- இவ்விவரங்களை Ariel Font , Size – 12–ல் குறுந்தகட்டில் (CD) பதிந்து தங்கள் கல்வி நிலையத்திற்குட்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திற்கு உரிய காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

**பொதுவான விவரங்கள்**

1. மேற்படி மூன்று கல்வி உதவித் தொகை திட்டங்களில் 30% பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.
2. மைய அரசின் மேற்படி கல்வி உதவித் தொகை பெற இயலாதவர்கள் மாநில அரசு (அ) நல வாரியங்கள் மூலம் வழங்கும் கல்வி உதவித் தொகை பெறுவதற்கு தத்தம் மாவட்ட ஆட்சியர் அலுவகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

# 6. <u>பொதுப்பரிசுகள்</u>

## <u>மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகள் வழங்குதல்</u>

பன்னிரண்டு மற்றும் பத்தாம் வகுப்பு அரசு தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த (மாணவ / மாணவியரை ஊக்குவிக்கும் வகையில் I, II, IIIவது நிலைகளில்) தலா ஒரு மாணவர் மற்றும் மாணவிக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகள் வழங்கப்படுகிறது. ஒரே மதிப்பெண்கள் பெற்ற மாணவ / மாணவியர்கள் பலர் இருந்தால் அவர்களுக்கும் பரிசுகள் கூடுதலாக வழங்கப்படும். தமிழை முதன்மை பாடமாக கற்றிருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | ஆண்டு வருமானம் கிராமப் புறங்களில் ரூ.40,000/–க்கும் நகர்புறங்களில் ரூ.55,000/–க்கும் மிகாது இருத்தல் வேண்டும்.<br><br>**<u>சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:-</u>**<br>1. சாதி, ஆண்டு வருமானம் சான்றிதழ்.<br>2. உணவு பங்கீடு அட்டை அல்லது<br>3. இருப்பிட சான்றிதழ் மற்றும்<br>4. வங்கிகள் கோரும் ஆவணங்கள். | |
| **<u>ஆட்டோ கடன் திட்டம்</u>**<br><br>தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தாய்கோ வங்கி மூலம் இக்கடன் 6% வட்டியில் அளிக்கப்படுகிறது.<br>கடன் தொகை:<br>எல்.பி.ஜி ஆட்டோ – ரூ.1.21 இலட்சம்<br>மற்ற ஆட்டோ – ரூ.1.00 இலட்சம்<br><br>பயனடைவோரின் பங்குத்தொகை 5%<br><br>டாம்கோ பங்குத்தொகை 10%<br><br>தேசிய கழகத்தின் பங்குத்தொகை 85%<br><br>கடன் தொகையில் 10% தாய்கோ வங்கிக்கு வைப்பு நிதியாக செலுத்த வேண்டும்.<br><br>இக்கடன் 48 மாத தவணைகளில் திரும்ப செலுத்தப்பட வேண்டும். | அ. பயனாளிகள்:<br>இசுலாமியர்கள், கிருத்துவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தினர் மற்றும் பார்சீ இனத்தை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.<br>ஆ. பயனாளிகள் வருட வருமானம் பின்வருமாறு இருக்க வேண்டும்.<br>கிராமப்பகுதியை சார்ந்தவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.40,000க்கு மேற்படாமலும், நகரப் பகுதியை சார்ந்தவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.55,000க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br>பயனடைவோரின் வயது 18ற்கு மேல் இருக்க வேண்டும்.<br>ஆட்டோ தொழில் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.<br>ஆட்டோ ஓட்டுநர் Badge இருக்க வேண்டும். | தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், 807, அண்ணா சாலை, 5வது மாடி, சென்னை–2.<br><br>அல்லது<br><br>மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர்கள்<br><br>அல்லது<br><br>பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம். |

| | | |
|---|---|---|
| **<u>கல்விக் கடன்</u>**<br><br>மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, அதன் கிளைகள், நகர கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் தொழிற் கல்வி மற்றும் மருத்துவ கல்வி பயில கல்விக் கடன் அளிக்கப்படும்.<br><br>ஒரு வருடத்திற்கு அதிக பட்சமாக ரூ.50,000 முறையே மற்றும் ஐந்து வருடத்திற்கு ரூ.2,50,000 வரையில் 3% வட்டியில் கடன் வழங்கப்படும்.<br><br>தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி (ம) நிதிக் கழகம் – 90%<br>டாம்கோ பங்குத் தொகை – 10%<br>மொத்தம் – 100%<br><br>கல்வி பருவக்காலம் முடிந்த தேதியிலிருந்து, அதாவது 6வது மாதத்திலிருந்து அல்லது பணியில் அமர்ந்த தேதியிலிருந்து இதில் எது முந்தையதோ அந்த தேதியிலிருந்து அசல் மற்றும் வட்டி தொகை வசூலிக்கப்படும். கல்வியை பாதியில் நிறுத்தும் பட்சத்தில் பெறப்பட்ட கடன் தொகை முழுவதையும் அதற்கான வட்டியுடன் ஒரே தவணையாக திரும்ப செலுத்த வேண்டும். | அ. பயனாளிகள் தமிழ்நாட்டைச் சார்ந்த இசுலாமியர்கள், கிருஸ்துவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தினர் மற்றும் பார்சீயர்கள் இனத்தை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.<br><br>ஆ.பயனாளிகள் வருட வருமானம் பின்வருமாறு இருக்க வேண்டும்.<br><br>கிராமப்பகுதியை சார்ந்தவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.40,000/–க்கு மேற்படாமலும், நகரப் பகுதியை சார்ந்தவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.55,000/–க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br>பயனடைவோரின் வயது 16–32க்குள் இருக்க வேண்டும்.<br><br>அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் மருத்துவம், பொறியியல், தொழிற் கல்வி மற்றும் இதற்கு ஈடான சிறந்த தொழிற் மற்றும் பயிற்சி கல்விகள் பயில வேண்டும் (MBBS / BDS / BUMS / B.Pharm / B.Sc.(Nursing) / B.V.Sc., / B.Sc.Agri. / B.E. / B.Tech. / B.Arch. / B.Ed. / Diploma in Technical Courses / MBA / BCA / MCA etc.)<br><br>1. சேர்க்கை கட்டணம் / பயிற்றுவிப்பு<br>2. புத்தகம், எழுதுபொருள் மற்றும் படிப்புக்கு தேவையான உபகரணங்கள்.<br>3. தேர்வுக் கட்டணம்.<br>4. விடுதி மற்றும் உணவுக் கட்டணம் (விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மட்டும்).<br><br>(1) சாதிச் சான்றிதழ் (2) பள்ளி மாற்று சான்றிதழ், (3) வருமான சான்றிதழ்<br>(4) இருப்பிட சான்றிதழ் (5) கல்விச் சான்றிதழ் (6) கல்லூரி கட்டண விவரங்கள் மற்றும் (7) இதர இனங்கள். (ஒவ்வொரு ஆண்டும் தேர்ச்சி பெற்றதற்கான மதிப்பெண் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்) ஆகியவற்றின் நகல்கள். | தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், 807, அண்ணா சாலை, 5வது மாடி, சென்னை–2.<br><br>அல்லது<br><br>மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர்கள்<br><br>அல்லது<br><br>மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்<br><br>அல்லது<br><br>மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அல்லது அதன் கிளைகள் அல்லது நகர கூட்டுறவு வங்கி. |

